# பேதுருவின் நிருபங்களிலுள்ள முக்கியக் கொள்கைகள்

**மனன வசனம்**

**நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 1பேதுரு 2:24.**

**ஆராய்ச்சிக்கு**

**ஏசாயா 53:5,6,9; லேவி 16:16-19; லேவி 11:44; ரோமர் 13:1-7; 1கொரிந்தியர் 14:40; 2தீமோத்தேயு 3:16.**

ஜூன் 17 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

சபைக்கு நேரிட்ட பிரச்சனைகளைச் சரிசெய்யவே பேதுரு நிருபங்கள் எழுதப்பட்டன. முதல் நிருபத்தில், கிறிஸ்தவர்கள் சந்தித்த உபத்திரவம்பற்றிப் பேசினார். இரண்டாம் நிருபத்தில், கள்ளப்போதகர்கள்பற்றிப் பேசினார். வாசகர்கள்முன் இருந்த சவால்களைப்பற்றி எச்சரித்து, அவர்களை ஊக்குவிக்கவே அதிகாரத்தோடு பேதுரு இந்த நிருபங்களை எழுதினார்.

இரண்டு பிரச்சனைகளையும் இறையியல் அடிப் படையிலேயே பேதுரு அணுகியது கவனிக்கத்தக்கது. உபத்திரவத்தால் வந்த துன்பங்களைப்பற்றிப் பேசின போது, இயேசுவின் துன்பங்களையும் மரணத்தையும் பற்றிப் பேசினார்; இயேசுவின் மரணத்தால்தானே நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. கள்ளப்போதகர்களைப் பற்றிப் பேசினபோது, நியாயத்தீர்ப்பைப்பற்றிப் பேசி னார். பரலோகத்தில் ஆயிரவருட அரசாட்சி நடந்தபின் இயேசுபூமிக்குவரும்போதுதண்டனைகொடுக்கப்படும். இவற்றைக்குறித்தே தனது இரண்டு நிருபங்களிலும் பேதுரு எழுதியிருக்கிறார்.

இந்தக் கடைசிப் பாடத்தில் ஐந்து கருத்துகளைப் பார்க்கப் போகிறோம்.

1) **இயேசு அடைந்த துன்பங்கள்; அவற்றால் நாம் இரட்சிக்கப்படுகிறோமே!**
2) **நம் செயல்களை தேவன் நியாயந்தீர்ப்பார் எனும் அறிவால் நாம் நம் வாழ்வில் செய்கிற மாற்றங்கள்**
3) **இயேசுவின் வருகைபற்றிய எதிர்பார்ப்பு**
4) **சபையிலும் சமுதாயத்திலும் ஒழுங்கு**
5) **நம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதில் வேதாகமத்தின் பங்கு**

2017, ஜூன் 24 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## துன்புறுதல், இயேசு, இரட்சிப்பு

**பின்வரும் ஒவ்வொரு வசனமும் இரட்சிப்பைப்பற்றி என்ன கருத்தை வெளிப்படுத்துகின்றது?**

*1பேதுரு 1:2* - ______________________________

*1பேதுரு 1:8,9* - ______________________________

*1பேதுரு 1:18,19* - ______________________________

*1பேதுரு 2:22-25* - ______________________________

*1பேதுரு 3:18* - ______________________________

இரட்சிப்பைப்பற்றி பேதுரு பேசினபோது, பாவிகளுக்குப் பதிலீடாக இயேசு அடைந்த துன்பங்களின் பின்னணியிலேயே பேசினார். உதாரணமாக, 1பேதுரு 2:22-24 இல் இயேசுவின் துன்பங்களைப்பற்றிப் பேசும்போது, ஏசாயா 53:5,6,9 வில் வரும் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். ‘அவர் தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்’ எனும் வார்த்தைகளைப் பாருங்கள். 1பேதுரு 2:24. பதிலீடு, பலி ஆகிய கருத்துகளை அவற்றில் பார்க்கலாம்.

எபிரெய வேதாகமம் சொல்கிறபடி, பலியிடும்போது ஒரு பாவி தன்னுடைய பலியின்மீது தன் கைகளை வைப்பான். பாவியின் பாவம் அந்தப் பலிக்கு மாற்றப்படுகிறது என்பதற்கு இந்தச் செயல் ஓர் அடையாளமாக இருந்தது; பின்னர் அந்தப் பாவிக்குப் பதிலீடாக அது கொல்லப்பட்டது. லேவி 4:29,30,33,34; 14:10-13. பலிபீடத்தில் சேர்ந்த தீட்டுகள் பாவநிவாரண நாளில் நீக்கப்பட்டது. லேவி 16:16-19.

பாவநிவாரணத்தில் பலியின் இரத்தம் முக்கியப் பங்கு வகித்தது. இயேசுவின் இரத்தத்தினாலே நாம் மீட்கப்படுகிறோமே. 1பேதுரு 1:18,19. ‘பாவமறியாத அவர் நமக்காகப் பாவமானார்’ என்று பவுல் சொல்லும்போது, பதிலீடு எனும் கருத்தைத்தான் அவரும் சொல்கிறார். 2 கொரிந்தியர் 5:21. கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் பாடுபட்டார். 1பேதுரு 3:18.

ரோமர் 3 :21,22 இல் பவுல் சொல்வதுபோலவே, விசுவாசத்தின் முக்கியத்துவத்தை பேதுருவும் வலியுறுத்துகிறார்: ‘அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள்.’ 1பேதுரு 1:8,9. தேவபக்தியான நம் நடத்தையால் அல்ல, இயேசு நமக்காகச் செய்தவற்றை நாம் விசுவாசித்து, அவரை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதன்மூலமே நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

---

இரட்சிப்பின் நிச்சயம் நம்மில் அல்ல, இயேசுவில் உள்ளது. நம்மில் என்றால், அப்படி ஏதாவது நிச்சயம் இருக்க வாய்ப்பு இருக்கிறதா? நம் பதிலீடாகிய இயேசுவே நம் இரட்சிப்புக்கு மாபெரும் நம்பிக்கை. இந்த அருமையான சத்தியத்திலிருந்து நாம் என்ன ஆறுதலைப் பெறலாம்?

## நாம் எப்படி வாழவேண்டும்?

2பேதுரு 3:11 இல் பேதுரு கேட்கிற கேள்விக்கு அவர் திரும்பத்திரும்ப வருகிறார். 'இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்?'

***கிறிஸ்தவனின் நடத்தை எப்படி இருக்கவேண்டுமென்று பேதுரு சொல்கிறார்? 1பேதுரு 1:15-17, 22; 1பேதுரு 2:1; 1பேதுரு 3:8,9; 1பேதுரு 4:7-11; 2 பேதுரு 3:11.***

கிறிஸ்தவ நடத்தைபற்றிப் பேசும்போது சில கருத்துகளை பேதுரு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.

**முதலாவது,** கிறிஸ்தவ நடத்தைக்கும் நியாயத்தீர்ப்புக்கும் இடையே உள்ள தொடர்பை அவர் இரண்டுமுறை வலியுறுத்துகிறார். 1பேதுரு 1:17; 2பேதுரு 3:11. ஒவ்வொருவரின் செயலையும் தேவன் நியாயந்தீர்ப்பார். எனவே, கிறிஸ்தவர்கள் பரிசுத்த வாழ்க்கை வாழவேண்டும்.

**இரண்டாவது,** கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக இருக்கவேண்டும். ஆலய உபயோகத்துக்காகப் பிரித்தெடுக்கப்படுபவை பரிசுத்தமானவை என்று பழைய ஏற்பாடு கூறுகிறது. யாத்திராகமம் 26:34; 28:36; 29:6,37. தேவநோக்கத்திற்காகப் பிரித்தெடுக்கப்படுபவை பரிசுத்தமானவை. உதாரணமாக, ஓய்வுநாள். ஆதி 2:3. தாம் பரிசுத்தராக இருப்பதுபோல, தமது மக்களும் பரிசுத்தராக இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். லேவி 11:44; 19:2; 1பேதுரு 1:15,16. பரிசுத்தமென்று பிரித்தெடுக்கிற வேலையானது பரிசுத்தமாக்கப்படுதல் எனப்படுகிறது. ஆவியானவரால், கீழ்ப்படிதலுக்கு நாம் பரிசுத்தமாக்கப்படவேண்டும். 1பேதுரு 1:2.

**மூன்றாவது,** பரிசுத்தமாக்கப்பட்டவர்களின் நடத்தை எப்படி இருக்கவேண்டும் என்பதையும் பேதுரு குறிப்பிடுகிறார். சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும் வஞ்சகங்களையும் பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழிக்கவேண்டும். 1பேதுரு 2:2. ஒருமனப்பட்டவர்களும் இரக்கமுள்ளவர்களும் சகோதர சிநேகமுள்ளவர்களும் மன உருக்கமுள்ளவர்களும் இணக்கமுள்ளவர்களுமாயிருக்கவேண்டும். 1பேதுரு 3:8. விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு இருக்கவேண்டும். 2பேதுரு 1:5-7. ஒருவரிலொருவர் வைத்துள்ள அன்பு ஊக்கமானதாக இருக்கவேண்டும். 1பேதுரு 4:8. நம் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடவேண்டும். 1பேதுரு 5:7.

நாம் பிறரைக் குறைசொல்லாமல் அவர்களை ஊக்கப்படுத்தி, பேதுரு தமது நிருபத்தில் சொல்கிற வாழ்க்கை வாழ எவ்வாறு உதவலாம்?

## இரண்டாம் வருகையில் நம்பிக்கை

**வருங்கால நிகழ்வுபற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன?**

*1பேதுரு 1:4* -______________________________

*1பேதுரு 1:17* -______________________________

*1பேதுரு 4:5,6* -______________________________

*1பேதுரு 4:17* -______________________________

*2பேதுரு 3:1-10* -______________________________

1பேதுருவில் சொல்லப்படும் முக்கியக் கருத்து உபத்திரவம் பற்றியது. இன்று உபத்திரவம் நம்மை வேதனைப்படுத்தினாலும், நம்மை விட்டு எடுபடாத நன்மை ஒன்று பரலோகத்தில் நமக்குக் காத்திருக்கிறது என்று நம்மைத் தேற்றுகிறார். 'அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது' என்கிறார். 1பேதுரு 1:4,5.

எதிர்காலத்தில் இரண்டு சம்பவங்கள் நடக்குமென்று பேதுரு சொல்கிறார்.

**1) நியாயத்தீர்ப்பு நடக்கும். 2) அக்கினியால் தீமை அழிக்கப்படும்.**

இப்போது உபத்திரவம் இருந்தாலும், நீதியும் நியாயமும் கிடைக்கும். விசுவாசிகள் நித்திய பலனைப் பெறுவார்கள்.

நியாயத்தீர்ப்புபற்றி மூன்று வசனங்களில் குறிப்பிடுகிறார்.

1) பட்சபாதமில்லாமல் அவனவன் கிரியைகளின்படி நியாயந்தீர்ப்பார். 1பேதுரு 1:17.
2) இயேசுதாமே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுப்பார். 1பேதுரு 4:5.
3) நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும். 1பேதுரு 4:17.

தேவபக்தியில்லாதோர் அக்கினியால் அழிக்கப்படுவார்கள். 2பேதுரு 3:7. இயேசு திரும்ப வருவாரா, வரமாட்டரா என்பதுபற்றியும் பேதுரு பேசுகிறார். 2பேதுரு 3:1-10. இன்னும் பலர் இரட்சிக்கப்படுவதற்காகவே, அவருடைய வருகைதாமதிக்கிறது. எதிர்காலத்தில் நாம் கணக்குகொடுக்க வேண்டியிருப்பதால், நாம் கறையற்ற பரிசுத்த வாழ்க்கை வாழவேண்டும்.

இன்று இங்கே எப்படிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டுமென்பதை முக்கியப்படுத்துகிற அதேவேளையில், எதிர்காலத்தில் நமக்குக் கிடைக்கப்போகிற நம்பிக்கைபற்றியும் பேதுரு பேசுகிறார். சுருக்கமாகச் சொன்னால், சூழ்நிலை எப்படி இருந்தாலும், விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் நாம் முன்னேற வேண்டும்.

சூழ்நிலை எப்படி இருந்தாலும், எதற்காக விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் நாம் முன்னேறவேண்டும். இதைவிட்டால், வேறு வழி எதுவும் இருக்கிறதா?

## சமுதாயத்திலும் சபையிலும் ஒழுங்கு



***நாட்டிலும் சபையிலும் தலைவர்களிடம் நடந்துகொள்ளவேண்டியவிதம்பற்றி பின்வரும் வசனங்களில் பேதுரு என்ன சொல்லுகிறார்? நாம் எங்கு வாழ்ந்தாலும், இன்றும் இந்தச் சூழ்நிலை நமக்கு வரலாம். அப்போது நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?***

*1பேதுரு 2:11-21* ______________________________

*1பேதுரு 5:1-5* ______________________________

பேதுருவின் காலத்தில் அரசாங்கத்தாலும் மதத்தலைவர்களாலும் சில சமயங்களில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். அதனால், அதிகாரங்கள் எதற்காக என்பதுகுறித்து பேதுருவும் பவுலும் சொல்வதை நாம் கவனிக்கவேண்டும். 1பேதுரு 2:13-17; ரோமர் 13:1-7. தீயவற்றைக் கட்டுப்படுத்த, தேவனே அரசு அதிகாரங்களை ஏற்படுத்தியிருப்பதாக இருவருமே குறிப்பிடுகிறார்கள். சில சமயங்களில் அரசு அதிகாரங்கள் தொந்தரவுதருவது உண்மைதான். பேதுருவின் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு இந்தப் பிரச்சனை இருந்தது. வரும் வருடங்களில் அது அதிகரிக்க இருந்தது.

நல்லதொரு அரசாங்கம் சட்ட-ஒழுங்குப் பிரச்சனையைக் கவனித்து, மக்களைப் பத்திரமாகப் பாதுகாக்கும் என்பது பொதுவாக சரியே. இப்போதும்கூட சட்ட-ஒழுங்குப் பிரச்சனை சில இடங்களில் ஏற்படுவது உண்டு. நல்ல அரசாங்கம் வேண்டுமென்கிற ஏக்கம் அப்போது உண்டாகும். நல்லதொரு அரசாங்கம் மனித இனத்துக்கு தேவன் தருகிற ஆசீர்வாதம்.

சபையிலும் நல்ல நிர்வாகம் இருக்கவேண்டுமென்பதை பேதுரு-பவுல் இருவருமே வற்புறுத்துகிறார்கள். 'சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது' என்கிறார் பவுல். 1கொரிந்தியர் 14:40. 'உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேயுங்கள்' என்கிறார் பேதுரு. 1பேதுரு 5:2. இதை அவர்கள் தாழ்மையோடும் அக்கறையோடும் செய்யவேண்டும். தனிச் சபைகளும் நன்முறையில் நிர்வகிக்கப்படவேண்டும். நல்ல தலைவர்களுக்குத் தூரப் பார்வை இருக்கும்; மற்றவர்களும் தேவமகிமைக்கு தங்கள் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்த அவர்கள் உதவுவார்கள்.

''நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்'' என்று 1பேதுரு 5:5 சொல்கிறது. அதை நாம் எவ்வாறு செய்வது? நீங்கள் மற்றவர்களிடம் பழகுவதில் இதை எப்படிச் செயல்படுத்துவீர்கள்?

## வேதாகமத்தின் முதன்மை

**நம்முடைய வாழ்க்கையிலும் விசுவாசத்திலும் வேதாகமத்தின் பங்குபற்றி, பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன?**

*1பேதுரு 1:10-12* ________________________________________

*2பேதுரு 1:16-20* ________________________________________

*2பேதுரு 3:2* ________________________________________

*2பேதுரு 3:16* ________________________________________

இரண்டாம் நிருபத்தில் கள்ளப்போதகர்களைப்பற்றி பேதுரு பேசுகிறார். 2பேதுரு 3:2 இல், இரண்டு அதிகாரமையங்களைக் குறித்து பேதுரு பேசுகிறார்.

1) **பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகள்**
2) **கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகள்**

பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகள் இப்போதும் பழைய ஏற்பாட்டில் உள்ளன. அப்போஸ்தலர்கள் இப்போது இல்லாவிட்டாலும், அவர்களுடைய வார்த்தைகள் நமது புதிய ஏற்பாட்டில் உள்ளன.

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகங்களில் இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல்பற்றி வாசிக்கிறோம். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அப்போஸ்தலருடைய செயல்பாடுகளைப்பற்றி வாசிக்கிறோம். ஆவியானவர் ஏவுதலால் அப்போஸ்தலர்கள் எழுதின வார்த்தைகளை நிருபங்களில் பார்க்கலாம். வேதாகமத்தின் அதிகாரம்பற்றி பவுல் ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார். 2தீமோ 3:16. உபதேசத்திற்கும் ஒழுக்கநெறிக்கும் தேவனுடைய வார்த்தைதான் ஆதாரம் என்று பேதுருவும் கூறுகிறார்.

2பேதுரு 3:16 இல், பேதுரு சொல்வதைக் கவனியுங்கள். சத்தியத்திற்கு ஆதாரம் வேதாகமம்தான். ஆனால், ஆவியானவர் சொல்லவருகிற செய்தியை நாம் கவனமாகக் கவனிக்காவிட்டால், சத்தியத்தின் ஆதாரத்தையே நாம் சந்தேகிக்கத் தொடங்கிவிடுவோம் ; விளைவு மிகவும் மோசமானதாக இருக்கும்.

- **வேதாகமத்தை ஜெபத்தோடு வாசிக்கவேண்டும்.**
- **வசனத்தை அதன் பின்னணியில் ஆராயவேண்டும்.**
- **எழுதினவரின் கருத்தை யோசிக்கவேண்டும்.**
- **வரலாற்றுப் பின்னணியைப் பார்க்கவேண்டும்.**
- **கிறிஸ்துவின் மரணத்தால் இரட்சிப்பு எனும் மையக்கருத்தை வைத்து ஆராயவேண்டும்.**
- **நம் வாழ்க்கையில் நாம் செய்யவேண்டிய மாற்றத்தை யோசிக்கவேண்டும்.**

---

நாம் என்ன சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்? தேவராஜ்யம் வளருவதற்கேதுவாக, தேவனுடைய வார்த்தையை நம் வாழ்வில் எவ்வாறு அப்பியாசிக்கவேண்டும்?

பலத்த இறையியல் கருத்துகளை முன்வைத்தாலும், கிறிஸ்தவ வாழ்க்கைபற்றியும் மற்றவர்களை எப்படி நடத்தவேண்டுமென்பதைப்பற்றியும் பேதுருவின் நிருபங்கள் பேசுகின்றன. இயேசுவில் வெளிப்பட்ட சத்தியத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும்; அதை நம் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டும். 'நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்.' 1பேதுரு 1:22. கீழ்ப்படிவதால் ஆத்துமாக்களைச் சுத்திகரிக்கலாம். சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருகிறவர்களாக, சத்தியம் நம்மை மாற்றும். கீழ்ப்படிதல், சுத்த இருதயம், அன்பு ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவைதாம் நம் இலட்சியமாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் நம் வாழ்வும் சபையும் எவ்வளவு வித்தியாசமாக இருக்கும்! வேறெது நடக்காவிட்டாலும், சபை ஒற்றுமை எவ்வளவு நன்றாக இருக்கும்! "சகோதரரே, உங்கள் வீட்டிற்கும் ஆலயத்திற்கும் நீங்கள் திரும்பிச்செல்லும்போது, கிறிஸ்துவின் சிந்தையைச் சுமந்து செல்வீர்களா? அவிசுவாசத்தையும் குறைகூறுதலையும் துரத்திவிடுவீர்களா? முன்பு இருந்ததைவிட ஒருவரோடொருவர் சேர்ந்து, ஒற்றுமையாக உழைக்கவேண்டிய காலத்தில் இருக்கிறோம். ஒற்றுமையே பெலம். பிரிந்திருந்தால் பெலவீனம்." – *2SM, 273,374.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *'தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்' என்று 2பேதுரு 3:12 சொல்கிறது. தேவனுடைய நாளை நாம் சீக்கிரமாய் வரவைக்க முடியுமா? தேவனுடைய நாளாகிய இரண்டாம் வருகையைச் சீக்கிரமாய் வரவைக்க, நாம் என்ன செய்யவேண்டும்?*
2. *இந்தப் பிரபஞ்சம் தேவனுடைய இரண்டாம் புத்தகம் என்பார்கள். தேவனுடைய முதல் புத்தகமாகிய வேதாகமத்தைத் திரித்துப்பேசுவது போல, இரண்டாம் புத்தகத்தையும் திரித்துப்பேச வாய்ப்பு உள்ளது. பிரபஞ்சத்தில் நோக்கத்தையும் திட்டத்தையும் பார்ப்பதற்குப் பதிலாக, டார்வினின் வகைமாற்றத்தையும் இயற்கைத்தேர்வையும் இன்று பார்க்கிறார்கள். "இந்த உலகில் ஒழுங்கு எதுவும் இல்லை; இருப்பதுபோல் தெரிகிறது" என்கிறார்கள். இரண்டாம் புத்தகத்திலிருந்து தேவனைப் புரிந்துகொள்வதற்கு ஓர் எல்லை இருக்கிறது அல்லவா? இரண்டாம் புத்தகத்தைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு முதலாம் புத்தகம் என்ன உதவிசெய்யமுடியும்? இரண்டாம் புத்தகத்திற்குச் சொல்லப்படுகிற விளக்கம் முதலாம் புத்தகத்தோடு ஒத்துப்போகவில்லை என்றால், என்ன ஆகும்? பிரச்சனை எங்கே இருக்கிறது? நாம் என்ன செய்யவேண்டும்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.